2022 ஏப்ரல் 19]

அனுமதி வழங்கப்பட்டு இடப் பற்றாக்குறையினால் பணி தொடங்கப்படாமல் உள்ளது. இதற்கு புதிய வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது 56 புதிய கட்டடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட (15+20=35) கட்டடங்களும் அடங்கும். தமிழ்நாட்டிலுள்ள 388 ஊராட்சி ஒன்றிய கட்டடங்களில் எதிர்காலத்தில் 69 கட்டடங்கள்தான் புதியதாக கட்ட வேண்டியதிருக்கும். ஏறத்தாழ 388 ஊராட்சி ஒன்றியங்களுக்கான கட்டடங்களில் ஏறத்தாழ 80 கட்டடங்கள்தான் இன்னும் பழைய கட்டடங்களாக இருப்பதாக அறிய வந்திருக்கிறது. அவற்றில் 69 கட்டடங்கள்தான் எதிர்காலத்தில் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

மின்மாற்றி

***3681—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், ஆங்காடு ஊராட்சி, பஜனைக் கோயில் தெருவில் உள்ள மின்மாற்றியை புதிதாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், ஆங்காடு ஊராட்சி, பஜனைக் கோயில் தெருவிற்கு 250 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிமூலம் 120 மின்னிணைப்புகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. சீரான மின் விநியோகத்திற்காக அப்பகுதியில் கூடுதலாக ஆங்காடுகுளத்தில் 100 கே.வி.ஏ. திறன் கொண்ட ஒரு புதிய மின்மாற்றி 9–3–2022 அன்று நிறுவப்பட்டு, நுகர்வோரின் பயன்பாட்டிற்காகக் கொண்டுவரப்பட்டு, மேற்கூறிய

இரு மின்மாற்றிகள்மூலம் தற்போது சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

முற்பகல் 10–40

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்சொன்ன அந்த மின்மாற்றி அமைக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டில் இருக்கின்றது. சென்னைக்கு அருகிலுள்ள மாதவரம் தொகுதி, மிக வேகமாக வளர்ந்து வருகின்ற தொகுதி என்பதால், அங்கு மின் தேவையும் மிக வேகமாக அதிகரித்துக்கொண்டு போகின்ற காரணத்தினால், என்னுடைய தொகுதிக்குட்பட்ட செங்குன்றம் பகுதியில் 33/11 கே.வி. துணை மின் நிலையத்தில் மின்பளு உயர்ந்துள்ளதால், ஏற்கெனவே உள்ள இரண்டு 16* MVA *மின்மாற்றிகளோடு, மேலும் ஒரு 8* MVA *திறன் கொண்ட மின் மாற்றியை* Power Transformers*–ஐப்போல அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

பாடியநல்லூர் கிராமத்தில் அமைக்கப்படவுள்ள 110 கே.வி. துணை மின் நிலையத்திற்கு 50 சென்ட் நிலம், சர்வே நெம்பர் 121/1 மற்றும் 121/2 இல் மாவட்ட நிருவாகம் இசைவு கொடுத்துள்ளது. இந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் விரைந்து முடிக்கப்பட்டால், செங்குன்றம், பாடியநல்லூர், சோழவரம், சோத்துபெரும்பேடு மற்றும் காரனோடை பகுதிகளில் தடையில்லாமல் சீரான மின்சாரம் கிடைக்க ஏதுவாக இருக்கும். மேலும், நல்லூர் ஊராட்சியில் கட்டப்பட்டு வருகின்ற தனியார் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில், 850 Sq.m. *இடம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

2022 ஏப்ரல் 19]

திரு. எஸ். சுதர்சனம்: *இந்தத் துணை மின் நிலையத்தையும் விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாதவரம் தொகுதிக்குட்பட்ட மகளிர் சிட்கோ தொழிற்பேட்டையில் அமைந்துள்ள 110 கே.வி. சிட்கோ துணை மின் நிலையத்தில், 10* MVA *மற்றும் 16* MVA *மின்மாற்றிகள் உள்ளன. அதிலுள்ள 10* MVA *மின்மாற்றியை 16* MVA *மின்மாற்றியாக மாற்றும் பணிகளை விரைந்து முடித்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற மாதவரம் சட்டமன்றத் தொகுதியில், சீரான மின் விநியோகம் செய்வதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, 25 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டிற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கின்ற அந்த 4 பகுதிகளிலும் ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள். சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் போன்று, உங்களுடைய கேள்வியும் சுருக்கமாக இருக்கட்டும்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற மாதவரம் பகுதியிலுள்ள 16 மாநகராட்சி வார்டுகளில் ஏற்படும் மின் விபத்தைத் தடுக்கவும், அடிக்கடி பழுது ஏற்படுவதைத் தடுக்கவும், பராமரிப்புகளுக்கான செலவைக் குறைக்கவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், இயற்கைப் பேரிடர் காலங்களில் ஏற்படும் மின் தடைகளைத் தவிர்க்கவும், தலைக்குமேல் செல்லக்கூடிய மின் கம்பிகளை அகற்றி, புதைவடமாக அமைத்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.*

[2022 ஏப்ரல் 19

மெட்ரோ இரயில் திட்டப் பணிகள் மாதவரத்தில் நடைபெற்று வருகின்றன. அங்கே 230 கே.வி. துணை மின் நிலையம் வரவுள்ளது. அதையும் விரைவுபடுத்தி, முடித்திட வேண்டும். அதற்கான பதிலைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிப் பகுதியில்,* underground cable *அமைக்கக்கூடிய பணிகள் முழுவதுமாக நிறைவுபெற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மின் வாரியத்திற்கு உத்தரவை வழங்கியிருக்கின்றார்கள். அதற்கான முதற்கட்டப் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற மாதவரம் தொகுதியிலுள்ள விடுபட்ட பகுதிகளுக்கு, இந்த ஆண்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இன்னொரு கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். அதையும் ஆய்வு செய்து, தேவை ஏற்படின், நிச்சயம் வாரியத்தின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.*

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில், ஆம்பூர் நகரை உள்ளடக்கி, கிட்டத்தட்ட சுமார் 200 கிராமங்கள் உள்ளன. இப்பகுதிகளில், அந்நியச் செலாவணியை அதிகம் ஈட்டித் தருகின்ற தோல் தொழிற்சாலைகள், காலணி தயாரிக்கும் தொழிற்சாலைகள், கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள், வணிக நிறுவனங்கள், வீடுகள், விவசாயப் பணிகள், தெரு விளக்குகள் ஆகியவை இயங்கி வருகின்றன. இவற்றில் ஏற்படுகின்ற மின்சாரம் சம்பந்தமான பிரச்சினைகளை அணுக வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பள்ளிகொண்டான் கோட்ட அலுவலகத்தை அணுக வேண்டிய நிலையுள்ளது.*

2022 ஏப்ரல் 19]

மேற்கண்ட பள்ளிகொண்டான் கோட்ட அலுவலகம் வேலூர் மாவட்டம், அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதியிலுள்ளது. இது பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும். தற்போது புதிதாக பிரிக்கப்பட்டுள்ள திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நகரில் போதிய கட்டட வசதி இருக்கின்ற காரணத்தினால், மின் வாரியம் சார்பாக ஆம்பூரில் கோட்ட அலுவலகம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய மின்னிணைப்புகளை கணக்கில் கொண்டு, 9 மண்டலங்களாகச் செயல்பட்டு வந்த மின் வாரியத்திற்கு, கூடுதலாக மூன்று புதிய மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதாவது, தஞ்சாவூர், திருவண்ணாமலை, கரூர் என 3 புதிய மண்டலங்களை உருவாக்கி, இன்று 12 மண்டலங்களாகச் செயல்படுத்துவதற்கான உத்தரவுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, கடந்த 16 ஆம் தேதி அந்த 3 புதிய மண்டலங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். இப்பொழுது கோட்டங்கள் கணக்கிடப்பட்டு வருகின்றன. எந்தெந்தப் பகுதிகளில் அதிகமான மின்னிணைப்புகள் இருக்கின்றன என்பதை கணக்கெடுக்கும் பணிகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வரக்கூடிய காலங்களில், தேவையின் அடிப்படையில், அவருடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உச்சப்பட்டியில் 9,500 குடியிருப்புகளைக் கொண்டிருக்கிற துணைக்கோள் நகரம் அமையவிருக்கின்றது. அதையொட்டி* AIIMS *மருத்துவமனையை புதிதாக*

அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அங்கேதான் தொழிற்பேட்டையும் அமைந்திருக்கிறது. இங்கே அதிகரித்து வருகின்ற மின் தேவையை கணக்கிலே கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணை மின் நிலையம் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் சீரான மின் விநியோகம் செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, 17 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பகுதியில், துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய தேவை ஏற்படின், வரக்கூடிய ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. கா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதியாண்டு எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையில், பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சியில் 110 KV துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த நிதியாண்டிலே அதிரை பேரூராட்சி, நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த புதிய சூழ்நிலையில், 110 KV–க்கான ஒப்பந்தப் பணிகள் இன்னும் நிறைவு பெறாத காரணத்தாலே, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் இதுவரை துவக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளை துரிதப்படுத்தித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2022 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 216 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அதில், 193 துணை மின் நிலையங்களுக்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் இப்பொழுது இறுதி செய்யப்பட்டிருக்கின்றன. விரைவில், அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவிருக்கின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் பணிகள் நிறைவு பெற்றபின், அதற்கான பணிகள் தொடங்கப்படும். குறிப்பாக 8,905 புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டதில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பட்டுக்கோட்டை தொகுதியில், 130 இடங்களில் புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு, அங்கு சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் பணிகளை விரைவாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

126—

மண்பாண்ட கூட்டுறவுச் சங்கம்

***7353—திரு. ஈ. ராஜா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *சங்கரன்கோவில் தொகுதியில் மண்பாண்ட கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*